www.Padasalai.Net www.TrbTnpsc.com

# T மூன்றாம் பருவ பொது தொகுத்தறித் தேர்வு - 2025

## ஆறாம் வகுப்பு

நேரம்: 2.00 மணி — சமூகஅறிவியல் — மதிப்பெண்கள்: 60

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:- 5×1=5**

1) தமிழகத்தில் பத்தினி வழிபாட்டை அறிமுகம் செய்தவர் ______

அ) பாண்டியன் நெடுஞ்செழியன் ஆ) சேரன் செங்குட்டுவன்

இ) இளங்கோ அடிகள் ஈ) முடத்திருமாறன்

2) கூற்று: இந்தோ - கிரேக்கர்களின், இந்தோ - பார்த்தியர்களின் குடியேற்றங்கள் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் நிறுவப்பட்டன

காரணம்: குடியேறிய பாக்டீரியர்களும், பார்த்தியர்களும் படிப்படியாக உள்ளூர் மக்களுடன் திருமண உறவுகொண்டு இரண்டறக் கலந்தனர்

அ) கூற்றும் காரணமும் சரி; காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.

ஆ) கூற்றும் காரணமும் சரி; ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல

இ) கூற்று சரி; ஆனால் காரணம் தவறு

ஈ) கூற்று தவறு; ஆனால் காரணம் சரி.

3) இந்தியா ______ உற்பத்தியில் முன்னணி வகிக்கிறது.

அ) துத்தநாகம் ஆ) மைக்கா இ) மாங்கனீசு ஈ) நிலக்கரி

4) புவியின் வடிவம்

அ) சதுரம் ஆ) செவ்வகம் இ) ஜியாய்டு ஈ) வட்டம்

5) மக்களாட்சியின் பிறப்பிடம் ______

அ) சீனா ஆ) அமெரிக்கா இ) கிரேக்கம் ஈ) ரோம்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக. 5×1=5**

6) வர்த்தன அரச வம்சத்தின் புகழ்பெற்ற அரசர் ______

7) அய்கோல் கல்வெட்டின் ஆசிரியர் ______ ஆவார்.

8) ______ ஆறு ஐரோப்பாவில் உள்ள ஒன்பது நாடுகளைக் கடந்து செல்கிறது.

9) உலகின் நேர மண்டலங்களின் எண்ணிக்கை ______

10) உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் பதவிக்காலம் ______ ஆண்டுகள்

**III. பொருத்துக. 5×1=5**

| | | |
|---|---|---|
| 11) தென்னர் | - | மாநிலத்தேர்தல் ஆணையம் |
| 12) அரசர் காரவேலர் | - | துருவம் |
| 13) மௌசின்ராம் | - | கலிங்கம் |
| 14) 98 அட்சக்கோடு | - | அதிக மழை |
| 15) உள்ளாட்சித் தேர்தல் | - | பாண்டியர் |

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**IV. சரியா? தவறா?** 6×1=6

16) புத்த சரிதம் அஸ்வகோஷரால் எழுதப்பட்டது.

17) தன்வந்திரி மருத்துவத் துறையில் ஒரு புகழ்பெற்ற அறிஞராகத் திகழ்ந்தார்.

18) ஐரோப்பாவின் இரண்டாவது உயரமான சிகரம் எவரெஸ்ட்.

19) $0^{o}$ அட்சக்கோடு நிலநடுக்கோடு எனப்படுகிறது.

20) உலக மக்களாட்சி தினம் ஆகஸ்ட் 15 ஆகும்.

21) சாலைகளில் விளையாடக் கூடாது.

**V. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வார்த்தையில் விடையளி:-**
(எவையேனும் 7 வினாக்களுக்கு மட்டும்) 7×2=14

22) நடுகல் அல்லது வீரக்கல் என்றால் என்ன?

23) காளிதாசரின் மாளவிகாக்னிமித்ரம் குறித்து சிறுகுறிப்பு வரைக.

24) நாளந்தா பல்கலைக்கழகத்தில் கற்றுத்தரப்பட்ட பாடப்பிரிவுகள் யாவை?

25) கடிகை - பற்றி நீங்கள் அறிந்ததென்ன?

26) ஆசியாவில் காணப்படும் முக்கிய துறைமுகங்களின் பெயர்களைக் குறிப்பிடுக

27) தல நேரம் என்பது என்ன?

28) புவியில் காணப்படும் நான்கு அரைக்கோளங்களின் பெயர்களை எழுதுக.

29) மக்களாட்சியின் வகைகள் யாவை?

30) கிராமசபைக்கூட்டங்கள் நடைபெறும் நாட்கள் யாவை?

**VI. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளி:- (எவையேனும் 3)** 3×5=15

31) சங்ககாலத்தில் பெண்களின் நிலை குறித்து விவாதிக்கவும்.

32) கட்டடக்கலைக்கு பல்லவர்கள் ஆற்றிய பங்களிப்பைத் திறனாய்வு செய்க

33) வேறுபடுத்துக: அ) வெப்பப் பாலைவனம் மற்றும் குளிர்பாலைவனம்
ஆ) நிலச்சரிவு மற்றும் பனிச்சரிவு
காரணம் கூறுக: இ) ஐரோப்பா உலகின் மிகப்பெரிய தீபகற்பம்

34) புவி மாதிரியின் பயன்கள் யாவை?

35) நம் அரசியலமைப்புச் சட்டத்தின் சிறப்புகளாக நீ புரிந்து கொண்டவை எவை?

**VII. பின்வரும் இடங்களை தமிழ்நாடு ஆறுகள் வரைபடத்தில் குறிக்க:-** 5×1=5

36) கொற்கை, காவிரிப்பூம்பட்டினம், முசிறி, உறையூர், மதுரை

**VIII. பின்வரும் இடங்களை ஆசிய வரைபடத்தில் குறிக்க:-** 5×1=5

37) இமயமலை, பாமீர், கோபி பாலைவனம், அரேபியன் தீபகற்பம், தக்காண பீடபூமி

********

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com